உள்ளத்தில் நம்பினால் இறந்தாலும் வாழ முடியும் என்று அவர் கூறினார். ஏனெனில் இயேசு மனித பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார், அவர் அடக்கம் செய்யப்பட்டு மூன்றாம் நாளில் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்து சொர்க்கத்தில் இருக்கிறார்.

*இறப்போடு மனித வாழ்க்கை முடிவடைகிறதா?*

மனித வாழ்க்கை இறப்போடு முடிவடைகிறதில்லை. இறந்த பிறகும் ஒரு வாழ்க்கை உண்டு; அந்த வாழ்க்கை தான் நித்திய வாழ்க்கை. இந்த நிரந்தரமான வாழ்க்கையை மனிதன் இரண்டே இடத்தில் தான் வாழ இயலும். ஒன்று, கடவுள் இருக்கக் கூடிய இடம், அது சொர்க்கம்; இன்னொன்று, கடவுள் இல்லாத வேதனையான இடம், அது நரகம். நீங்கள் இறந்த பின் சொர்க்கத்தில் வாழ விரும்பினால், இயேசு கிறிஸ்து ஒருவரே வழியாக இருக்கிறார்.

*அதற்கு இயேசு: “நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்”. (யோவான் 14:6.)*

மேலும் இதைப் பற்றி நீங்கள் அறிந்துகொள்ள விரும்பினால் எங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

**SATHGAMAYA MEDIA FOUNDATION**
Church Junction, Mylapra Town P.O., Pathanamthitta.



கடவுள் என்று ஒருவர் இருந்தால் ஏன் மனிதர்கள் அற்ப ஆயுளில் இறந்துபோகிறார்கள் என்ற கேள்வி நமக்கு அவ்வப்போது எழுவதுண்டு.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, யோபு என்ற ஒரு மனிதன் கடவுளுக்குப் பயந்து, நேர்மையான வாழ்க்கை வாழ்ந்து வந்தான். ஆனால், அவனுக்கு இருந்த ஏழு மகன்களும், மூன்று மகள்களும் ஒரே நேரத்தில் அகால மரணமடைந்தார்கள். அப்பொழுது அந்த மனிதன் *கடவுள் இருக்கிறாரா?* என்ற கேள்வியைக் கேட்கவில்லை. பத்து பிள்ளைகளின் இறப்பின் வலியைத் தாங்க முடியாமல், இருந்தபோதும், *"கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்"* என்றான்.நம்மில் எவருமே கடவுளிடம், ஏன் என்ற கேள்வியைக் கேட்க முடியாது. ஒரு மனிதனுடைய பிறப்பையும் இறப்பையும் தீர்மானிக்கக்கூடிய அதிகாரம் கடவுள் ஒருவருக்கே உள்ளது. மனித வாழ்க்கையின் யதார்த்தத்தை யோபு உணர்ந்ததாலேயே அவரால் இவ்வாறு கூற முடிந்தது.

முதலாவது, அவர் மனித வாழ்க்கை மிகவும் குறுகியது என்பதையும், இரண்டாவது, மனித வாழ்க்கை ஒரு பூவைப்போல காலையில் பூத்து மாலையிலே வாடிவிடும் என்றும், மூன்றாவதாக, மனிதனுடைய வாழ்க்கை ஒரு நிழலைப்போல் நிலையற்றது என்றும் புரிந்து கொண்டார்.

யோபு என்ற இந்த மனிதன் தன் பிள்ளைகள் இறந்ததற்குப் பிறகு, அவருக்குள் எழுந்த ஒரு கேள்வி மனிதன் இறந்த பின் பிழைப்பானோ? என்பதேயாம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் மனிதனுடைய பாவத்திற்குப் பரிகாரத்தை உண்டு பண்ணும்படி இந்தப் பூமிக்கு வந்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அதற்கு பதில் அளித்தார்.

இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்தபோது, எருசலேம் என்கிற நகரத்திற்கு அருகில் பெத்தானியா என்று சொல்லக்கூடிய ஒரு கிராமம் இருந்தது. அந்த கிராமத்திலே லாசரு என்னும் மனிதன் ஒருவனிருந்தான். அவன் நோய்வாய்ப்பட்டு இறந்துபோனான். இந்த லாசருவை நல்லடக்கம் செய்து நான்கு நாட்களும் ஆகிவிட்டன. இந்தச் சம்பவத்திற்கு பிற்பாடு இயேசு கிறிஸ்து அந்த துக்க வீட்டிற்குப் போனார். அங்கே மரித்துப்போன லாசருவின் சகோதரி மார்த்தாள் இயேசு கிறிஸ்துவிடம் வந்து *"நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்க மாட்டான்"* என்று சொன்னாள். அப்பொழுது இயேசு அவளை நோக்கி: *"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறேன் என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" (யோவான் 11:25)* என்று கூறினார்.

இதன் அர்த்தம், இயேசு கிறிஸ்து ஒருவரே உயிருள்ள உண்மையான ஆண்டவர் என்பதை